செய்தி வெளியீடு எண்.692                                                    08.10.2009

**வேதியியல் துறை கண்டுபிடிப்புக்காக**
**உலகின் மிக உயரிய நோபல் பரிசு பெறும்**
**தமிழ் விஞ்ஞானி வெங்கட்ராமன் இராமகிருஷ்ணன் அவர்களுக்கு**
**முதலமைச்சர் கலைஞர் பாராட்டு!**

**கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் பிறந்து, பரோடா பல்கலைக்கழகத்தில் இயற்பியல் துறையில் பி.எஸ்சி., பட்டம் பெற்று, பின்னர் அமெரிக்க நாட்டிலுள்ள ஓகையோ பல்கலைக்கழகத்தில் பி.எச்.டி., ஆய்வு முடித்து, முனைவர் பட்டம் பெற்றவர் விஞ்ஞானி வெங்கட்ராமன் இராமகிருஷ்ணன். அமெரிக்க நாட்டில் வாழும் இவர் இங்கிலாந்து நாட்டிலுள்ள கேம்பிரிட்ஜ் நகரில் எம்.ஆர்.சி. மூலக்கூறு உயிரியல் ஆய்வுக் கூடத்தில் விஞ்ஞானியாகப் பணியாற்றுகிறார். இவர் உயிரினங்கள் அனைத்திலும் வேதியியல் நிகழ்வுகளைக் கட்டுப்படுத்துகிற புரோட்டீன்களை உருவாக்கும் "ரிபோசெம்" செயல்பாடுகள் குறித்து அமெரிக்க நாட்டைச் சேர்ந்த தாமஸ் ஏ.ஸ்டெல்ட்ஸ், இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த பெண் விஞ்ஞானி ஆடாஇ.யோனத் ஆகியோருடன் இணைந்து ஆய்வு மேற்கொண்டுள்ளார். இந்த ஆய்வின் மூலம் நோய்களை எதிர்க்கும் புதிய நச்சு நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளை உருவாக்குதல் தொடர்பான இவரது கண்டுபிடிப்புக்காக 2009ஆம் ஆண்டு வேதியியல் துறைக்கான நோபல் பரிசு வழங்கப்படுவதாக ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி ஆல்பிரெட் நோபல் நினைவாக நிறுவப்பட்டுள்ள நோபல் பரிசுக் குழு அறிவித்துள்ளது. பெருமைக்குரிய இச்செய்தி கேட்டு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைந்து, விஞ்ஞானி வெங்கட்ராமன் இராமகிருஷ்ணன் அவர்களை மனமாரப் பாராட்டுவதாக அறிவித்துள்ளார்.**

**மேலும், ஏற்கனவே நோபல் பரிசு பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த சர்.சி.வி.இராமன், சந்திரசேகர் ஆகிய இரண்டு விஞ்ஞானிகளை அடுத்து, மூன்றாவது தமிழ் விஞ்ஞானியாக வெங்கட்ராமன் இராமகிருஷ்ணன் உலகில் வழங்கப்படும் மிக உயரிய விருதாகிய நோபல் பரிசினைப் பெற்றுள்ளதன் மூலம் தமிழ்ச்சமுதாயமே மிகவும் பெருமையடைகிறது என்றும், இப்பெருமைக்குரிய விஞ்ஞானி வெங்கட்ராமன் இராமகிருஷ்ணன் அவர்களுக்குத் தமிழக அரசின் சார்பில் தனது மனமார்ந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்வதாகவும் முதலமைச்சர் கலைஞர் தமது பாராட்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார்.**

***********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9